# ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை நேரம் வினா எண் 337தலைப்பு
# மீண்டும் பிறவாமை என்பது தீய குணங்களை முழுவதுமாக விட்டு விடுவதே ஆகும்.

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் இரண்டு பக்கம் 234-240லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி:ஸ்வாமி தீய எண்ணங்களான பொறாமை வெறுப்பு தற்பெருமை அகந்தை பற்று இவையெல்லாம் எங்கிருந்து வருகின்றன.இவற்றை அழித்தொழிப்பது எவ்வாறு.

ஸ்வாமியின் பதில்:இவை அனைத்திற்கும் காரணம் உடல் பற்றுதான்.
இந்த தீய உணர்வுகள் உங்கள் மனதிலே பிறக்கின்றன.நீங்கள் மற்றவர்களுடன் பழகுவது மற்றும் உறவு ஏற்படுத்தி கொள்வதை பொறுத்து இவை அமைகின்றன.
உங்கள் நெருங்கிய நண்பனுடன் நீங்கள் எல்லா விஷயத்திலும் ஒத்து போகிறீர்கள்.இது நல்ல படியாக போகும் வரை சரி.உங்களிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விட்டால் நீங்கள் நல்லதை சொன்னால் கூட அவர் தவறாகவே எடுத்து கொள்வார்.நீங்கள் ஒரு ரோஜா மலரை கொடுத்தால் கூட சர்க்கரை நோயாளியான அவருக்கு அதிலுள்ள முள் குத்தி புண்ணாகி கைகளையே எடுக்கும்படியாகிவிடும்.நண்பனாக இருந்த போது சாதாரணமாக பார்க்கப்பட்ட செயல் விரோதியானதும் தீவிரமாகிவிடுகிறது.ஆக எல்லாமே மனதை பொறுத்தே அமைகின்றது.
உங்களின் அடுத்த பலஹீனம் கோபம்.எதற்காக நீங்கள் மற்றவர்களிடம் கோபப்பட வேண்டும்.இதனால் உங்கள் இரண்டுமாத உணவினால் கிடைத்த சக்தி விரையமாகி நீங்கள் பலஹீனம் ஆகின்றீர்கள்.
கோபத்திற்கு காரணம் என்ன.யாராவது உங்களை கேலி செய்து குற்றம் சுமத்தி பழி சொன்னால் அவர்கள் மீது உங்களுக்கு கோபம் வரும்.உங்கள் தவறுகளை சுட்டி காட்டுபவர் மீது நீங்கள் ஏன் கோப பட வேண்டும்.இது தவறல்லவா.
சரி உங்கள் மீது தவறு இல்லை என்றாலும் அவர் சொல்வதற்கு நீங்கள் ஏன் கோப பட வேண்டும்.அவர் சொல்வதில்தான் உண்மை இல்லையே.
என்னை பார்த்து ஒருவர் இவர் ஒரு பரட்டை தலையர் என சொன்னால் நான் கோபபட மாட்டேன்.ஏனென்றால் அவர் சொல்வது உண்மை.என்னை பார்த்து ஒருவர் இவர் மொட்டை தலையர் என்று சொன்னாலும் நான் கோப பட மாட்டேன்.
ஏனென்றால் அவர் சொல்வது உண்மை இல்லை.

அடுத்து குணப்படுத்த முடியாத வியாதியான பொறாமை.அதனால் ஏற்பட்ட வெறுப்பு பேரரசர்களான ஹிரண்யகசிபு

ஹிரண்யாஷன்,சிசுபாலன்,தண்டவக்த்ரன் என பலரை வீழ்த்தியிருக்கிறது.மஹாபாரதத்தில் பொறாமை கௌரவ வம்சத்தையே அழித்தது.இராமாயணத்தில் மந்தராவும் பொறாமையின் அடையாளமாகும்.அதனால் கைகேயிக்கும் அவப்பேர் வந்தது.யாராவது துரியோதனன் கைகேயி சிசுபாலன் மந்தரா என பெயர் வைத்து கொள்கிறார்களா.

ஒரு போதும் அகந்தை கொள்ளாதீர்கள்.அது அவமரியாதையை கொண்டு சேர்க்கும்.

இந்த பிரபஞ்சத்தில் பாரத தேசம் ஒரு ஏறும்பு போன்ற அளவே உள்ளது.அதில் ஆந்திர பிரதேசம் எறும்பின் கண் அளவே உள்ளது.அதில் அனந்தபூர் மாவட்டம் கண்ணின் இமை அளவே உள்ளது.இதிலே புட்டபர்த்தி எங்கே,அதில் வசிக்கின்ற நீங்கள் எங்கே.மனிதர்கள் மிக மிக சிறியவர்களே.

அவ்வாறு இருக்கும் போது அகந்தை வருவதற்கு காரணமே இல்லை அல்லவா.

நான் எனது என்ற பற்றுதல்கள் அபிமானத்தால் ஏற்படுகின்றன.அவையும் நல்லதல்ல.உங்கள் பக்கத்து வீட்டு பெண் நீண்ட நாட்களாக உடல் நலம் சரியில்லாது இருந்தாலும் நீங்கள் கவலை படுவதில்லை.ஆனால் அவரை நீங்கள் மணந்து கொணாடுவிட்டால் அவருக்கு ஒரு நாள் உடம்பு சரியில்லாமல் போனாலும் நீங்கள் ஆபிசுக்கு லீவு போட்டு விடுகிறீர்கள.

இது அவர் பால் உங்களுக்கு உள்ள பற்றுதலால்தான்.

இந்த மமகாரம் என்னும் பாசத்தால் திருதாஷ்ரன் தன் புதல்வர்களின் தவறுகளை கண்டிக்காமல் போனதால் இறுதியில் கௌரவ வம்சமே அழிந்து போனது.அவர் நூறு மகன்களை பெற்ற போதும் அவரது இறுதி சடங்கு செய்ய ஒரு மகன் கூட உயிருடன் இல்லை.மமகாரம் என்னும் இந்த பற்று ஒருவரை இந்த நிலைக்கு கொண்டு சேர்த்துவிடும்.

இதுபோன்ற தீய குணங்கள் தலை தூக்கும் போதெல்லாம் உங்களுக்குள் நான் மனிதன் மிருகமல்ல என திரும்ப திரும்ப சொல்லி கொண்டேயிருங்கள்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி எவ்வளவு அழகாக எளிய வார்த்தைகளில் உள்ளார்ந்த விஷயங்களை தாங்கள் சொல்லி அருள்கிறீர்கள்.

ஸ்வாமி வாழ்கையின் இறுதி இலக்கான மீண்டும் பிறவாமை என்பதை அடைய வழி என்ன ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:மிக எளிது.மீண்டும் பிறவாமை என்ற நிலையை அடைய உங்களிடமுள்ள தீய குணங்களை முழுவதுமாக விட்டொழிக்க வேண்டும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி பற்றற்ற வாழ்க்கை வாழ்வது எவ்வாறு.எங்களுடைய செல்வங்கள் சொந்தங்கள் பறி போகும் போது மிகுந்த மன வருத்தம் அடைகிறோம்.

இதை தவிர்ப்பது எவ்வாறு என எங்களுக்கு சொல்லியருங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:உங்கள் பிறவிக்கான காரணத்தையும் இலக்கையும் நீங்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் உங்களுக்கு உண்டான கடமைகளையும் பொறுப்புகளையும் ஒரு போதும் தட்டி கழிக்க கூடாது.இன்றைய செய்தி தாள் நாளை வெற்று காகிதம்.
கடந்த காலம் மீண்டும் வரவே வராது.இந்த உலகமும் மற்றவர்களுடன் உங்களுக்கு உள்ள தொடர்பும் நிரந்தரமானது என நம்பி விடாதீர்கள்.எந்த கடினமான சூழ்நிலையிலும் கடவுளை மறந்து விடாதீர்கள்.இறப்பை கண்டு பயப்படாதீர்கள்.மனித வாழ்கை இறைவனால் உங்களுக்கு அளிக்கப்பட்ட பெருங் கொடையாகும்.
நான் யார்.
எங்கிருந்து வந்தேன்.
இறைவன் எங்கே இருக்கிறார் பிறந்து விட்டதன் நோக்கம் என்ன என உங்களுக்குள்ளே கேட்டுக் கொண்டே இருங்கள்.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்
ஜெய் சாயிராம்